மூத்த பத்திரிகையாளர்கள் சித்தார்த் வரதராஜன் – கரண் தாப்பாவுக்கு அசாம் காவல்துறை அழைப்பாணை!

# கேள்வி கேட்பதே தேச துரோகமாகக் கருதப்பட்டால் மக்களாட்சி பிழைக்க முடியாது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவில் கண்டனம்!

சென்னை, ஆக. 22 -

முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதள பதிவு வருமாறு :-

**‘தி வயர்’ ஊடகத்தைச் சேர்ந்த மூத்த பத்திரிகையாளர்கள் சித்தார்த் வரதராஜன் மற்றும் கரண் தாப்பர் ஆகியோருக்கு அழைப்பாணை விடுத்துள்ள அசாம் மாநிலக் காவல்துறையின் நடவடிக்கைக்கு எனது வன்மையான கண்டனங்கள்.**

**இதுதொடர்பான மற்றொரு வழக்கில் சில நாட்களுக்கு முன்புதான், உச்சநீதி மன்றம் கைது நடவடிக்கைக்குத் தடை விதித்து உத்தரவிட்டிருந்த நிலையில், இந்த அழைப்பாணைகள் அனுப்பப்பட்டுள்ளன. அதுவும் முதல் தகவல் அறிக்கையின் படியையோ, வழக்கின் விவரங்களையோ வழங்காமல், வெறுமனே கைது மிரட்டல் மட்டும் விடுக்கப்பட்டுள்ளது. நீக்கப்பட்ட தேச துரோகப் பிரிவுக்கு மாற்றாகவே BNS பிரிவு 152 சுதந்திரமான பத்திரிகைத் துறையைக் கட்டுப்படுத்தத் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது.**

**கேள்வி கேட்பதே தேச துரோகமாகக் கருதப்பட்டால் மக்களாட்சி பிழைக்க முடியாது!**

இவ்வாறு முதல்வர் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



கழகப் பொருளாளர் – மக்களவை கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு அவர்களின் துணைவியாரும், தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜாவின் தாயாருமான திருமதி. ரேணுகாதேவி அவர்கள் மறைவுற்ற செய்தி அறிந்து மக்கள் நீதி மய்யத் தலைவர் கமலஹாசன் எம்.பி. அவரது இல்லத்திற்கு நேரில் சென்று துணைவியாரை இழந்து வாடும் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. அவர்களுக்கும், அமைச்சர் டி.ஆர்.பி.ராஜாவுக்கும் ஆறுதல் கூறினார். உடன் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் பூச்சி முருகன் உள்ளார்.

# கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. துணைவியார் மறைவு!

## கட்சித் தலைவர்கள் – அமைச்சர்கள் – கழக முன்னணியினர் – கலையுலகினர் அஞ்சலி – ஆறுதல்!

சென்னை, ஆக. 22 -

கழகப் பொருளாளரும் மக்களவை கழகக் குழுத் தலைவருமான டி.ஆர். பாலு அவர்களின் துணைவியாரும் தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜாவின் தாயாருமான திருமதி. ரேணுகா தேவியின் மறைவுக்கு கட்சித் தலைவர்கள், கழக முன்னணியினர், அமைச்சர்கள், சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள், கலைத்துறையினர் உள்ளிட்டோர் அன்னாரது இல்லம் சென்று மறைந்த ரேணுகா தேவியின் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தி டி.ஆர்.பாலு அவர்களுக்கு ஆறுதல் தெரிவித்தனர்.

கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு அவர்களுக்கு ஆறுதல் கூறி திருமதி. ரேணுகா தேவியின் திருவுருவப் படத்திற்கு அஞ்சலி செலுத்தியவர்கள் வருமாறு: -

கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., மார்க்சிஸ்ட் மாநிலச் செயலாளர் ஆர்.பாலகிருஷ்ணன், முன்னாள் ஆளுநர் தமிழிசை சௌந்தர ராஜன், கலைஞானி கமலஹாசன் எம்.பி., ‘இந்து’ என்.ராம், நடிகர் சத்யராஜ், திவ்யா சத்யராஜ், டாக்டர் தணிகாசலம், சு.வெங்கடேசன் எம்.பி., லீ மெரிடியன் பெரியசாமி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ், மார்க்சிஸ்ட் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டி.கே.ரெங்கராஜன், வை.செல்வராஜன் எம்.பி., சு.கல்யாணசுந்தரம் எம்.பி.

அமைச்சர்கள் ஐ.பெரியசாமி, எஸ்.ரகுபதி, அர.சக்கரபாணி, கோவி. செழியன், சி.வெ.கணேசன், முன்னாள் அமைச்சர் க.பொன்முடி,

தலைமை நிலையச் செயலாளர்கள் துறைமுகம் காஜா, பூச்சி முருகன், சட்டத்துறை செயலாளர் என்.ஆர். இளங்கோ, ஏ.கே.எஸ்.விஜயன், கம்பம் என்.செல்வவேந்திரன், விஜயா தாயன்பன்,

மாவட்டச் செயலாளர்கள் கோ.தளபதி எம்.எல்.ஏ., துரை சந்திரசேகரன் எம்.எல்.ஏ., கே.கே.செல்லப் பாண்டியன், டாக்டர்.கௌதம சிகாமணி, கோவை தளபதி முருகேசன், காதர் பாட்ஷா (எ) முத்துராமலிங்கம்,

சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ. கிருஷ்ணசாமி, எழும்பூர் இ.பரந்தாமன், எஸ்.ஆர்.ராஜா, பட்டுக்கோட்டை அண்ணாதுரை, பேராவூரணி அசோக் குமார், பரமக்குடி முருகேசன்,

தஞ்சை மத்திய மாவட்ட பொருளாளர் எல்.ஜி.அண்ணா, முத்துப்பேட்டை எம்.எஸ்.கார்த்திக், திருவாரூர் அமுதா சேகர், பழஞ்சூர் செல்வம், மதுக்கூர் ரூஸ்வெல்ட் திருத்துறைப்பூண்டி பா. ஆடலரசன், அஞ்சுகம் பூபதி, ஆனைமலை அதிரடி அல்டாப், கோவை பாப்பநாயக்கன்பட்டி ராஜேந்திரன், பொள்ளாச்சி முன்னாள் எம்.பி., சண்முக சுந்தரம், முன்னாள் அமைச்சர் மு.கண்ணப்பன் புதல்வர் மு.க. முத்து,

வழக்கறிஞர் வீரசேனன், (சன் டி.வி.) வீரபாண்டி, ஆடிட்டர் துரைராஜ், தாரேஸ் அகமது ஐ.ஏ.எஸ்., உள்ளிட்ட அரசு அதிகாரிகள் மற்றும் கழக முன்னணியினர் ரேணுகாதேவியின் படத்திற்கு அஞ்சலி செலுத்தி கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு அவர்களுக்கு ஆறுதல் கூறினர்.

அமைச்சர்கள் கைது செய்யப்பட்டு

# 30 நாள் சிறை வைக்கப்பட்டால் தகுதி நீக்கம் செய்யும் மசோதா!

## எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு!

புதுடெல்லி, ஆக. 22 -

அமைச்சர்கள் கைது செய்யப்பட்டு 30 நாள் சிறைவைக்கப்பட்டால் தகுதி நீக்கம் செய்யும் மசோதாவை கடுமையாக எதிர்க்கட்சிகள் எதிர்த்தன.

அமைச்சர்கள் கைது செய்யப்பட்டு 30 நாள் சிறைவைக்கப்பட்டால் தகுதி நீக்கம் செய்யும் மசோதாவை ஒன்றிய அரசு நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என அறிவித்திருந்தது.

மழைக்கால கூட்டத் தொடர் முடிவடையும் நிலையில், தகுதி நீக்கம் செய்யும் மசோதாவை மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டது.

மசோதாவை ஆய்வு செய்ய நாடாளுமன்ற கூட்டுக்குழு அமைக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. 5 ஆண்டு தண்டனை கிடைக்கும் குற்ற வழக்குகளில் ஒரு அமைச்சர் கைது செய்யப்பட்டு, 30 நாட்கள் சிறை வைக்கப்பட்டால் அவரது அமைச்சர் பதவி தானாக காலியாகிவிடும் என்று இந்த மசோதாவில் கூறப்பட்டுள்ளது.

அமலாக்கத்துறை வழக்குகளால் எதிர்க்கட்சிகளை ஒடுக்கிவரும் பா.ஜ.க. இந்த மசோதா மூலம் மேலும் தாக்குதல் நடத்த திட்டமிட்டுள்ளதாக புகார் எழுந்துள்ளது. எனவே, இந்த மசோதாவை தாக்கல் செய்யும் போதே இதனை எதிர்க்கட்சிகள் கடுமையாக எதிர்த்தன.

**காங்கிரஸ் பொதுச் செயலாளர் கே.சி.வேணுகோபால்!**

காங்கிரஸ் பொதுச்செயலாளர் கே.சி.வேணுகோபால் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், முதலமைச்சர்கள், அமைச்சர் மீது எந்த நீதிமன்ற உத்தரவும் இல்லாமல் தகுதி நீக்கம் என்பது அடிப்படை ஜனநாயகத்துக்கும், அரசியல் சாசனத்துக்கும், சட்ட நடைமுறைகளும் எதிரானது என்றும் இது பிளாக்மெயில் மசோதா என்றும் விமர்சித்துள்ளார்.

விவசாயிகளை தொழில் முனைவோர்களாக உருவாக்கி

# வேளாண் பொருட்களை அதிக அளவில் ஏற்றுமதி செய்ய வேண்டும்!

## ஆய்வுக் கூட்டத்தில் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவுறுத்தல்!

சென்னை, ஆக. 22 -

வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் தமிழ்நாட்டில் வேளாண் விளைபொருட்கள் மதிப்புக்கூட்டுதல் மற்றும் ஏற்றுமதியை அதிகரித்திட ஏற்றுமதியாளர்கள், தமிழ்நாடு உணவு பதப்படுத்துதல் மற்றும் வேளாண்பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகம் (TNAPEx) மற்றும் வேளாண்மை-உழவர் நலத்துறை சார்ந்த அலுவலர்களுடன் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது.



வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் தலைமையில் தமிழ்நாட்டில் வேளாண் விளைபொருட்கள் மதிப்புக்கூட்டுதல் மற்றும் ஏற்றுமதியை அதிகரித்திட ஏற்றுமதியாளர்கள், தமிழ்நாடு உணவு பதப்படுத்துதல் மற்றும் வேளாண்பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகம் (TNAPEx) மற்றும் வேளாண்மை-உழவர் நலத்துறை சார்ந்த அலுவலர்களுடன் 20.08.2025 அன்று நடைபெற்ற கலந்தாய்வுக் கூட்டத்தில், தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் செயல்படும் வேளாண் விளைபொருட்கள் ஏற்றுமதியாளர்கள் காணொலி மூலம் கலந்து கொண்டு தாங்கள் ஏற்றுமதி செய்யும் மதிப்புக்கூட்டப்பட்ட வேளாண் விளை பொருட்கள், ஏற்றுமதி செய்வதில் ஏற்படும் இடர்ப்பாடுகள், அதனை நிவர்த்தி செய்திட மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் ஏற்றுமதி வாய்ப்பினை அதிகரித்திட கடைப்பிடிக்க வேண்டிய உத்திகள் போன்ற பல்வேறு தகவல்களைப் பகிர்ந்து கொண்டனர்.

**ஏற்றுமதியை அதிகரிக்க வேண்டும்!**

தமிழ்நாட்டில், மாம்பழக்கூழ், முருங்கை, பாரம்பரிய அரிசி வகைகள், சிறுதானியங்கள், நிலக்கடலை, முண்டு மிளகாய், முந்திரி, முட்டை, சுவைதாளித மற்றும் நறுமணப் பொருட்கள், காய்கறிகள், பூக்கள், பழங்கள், நெல்லிக்காய், கறிவேப்பிலை, தேங்காய், வாழை, மருத்துவ பயிர்கள் போன்ற விளைபொருட்கள் மற்றும் அவற்றின் மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களை ஏற்றுமதி செய்து வருவதாகவும் இதில் சில விளைபொருட்களுக்கு அதிக இறக்குமதி வரி, விலை ஏற்ற இறக்கங்கள், கடல்வழி, வான்வழி சரக்குக் கட்டண உயர்வு, கூடுதல் சரக்கு மற்றும் சேவை வரி, அளவை மிஞ்சிய நச்சுத் தன்மை, நச்சுத்தன்மை பரிசோதனைக்கு மிகுந்த கட்டணம், சரக்குக் கப்பல் கிடைப்பதில் ஏற்படும் தாமதத்தால் எதிர்கொள்ளப்படும் செலவினங்கள், முருங்கைக்கான ஏற்றுமதிக் குறியீட்டு எண் (HSN Code), ஏற்றுமதி தேவைக்கான போதிய உற்பத்தியின்மை, பல்வேறு நாடுகளுக்கான ஏற்றுமதி தரநிலைகள் குறித்த விழிப்புணர்வின்மை போன்றவற்றால் ஏற்றுமதியில் போதிய முன்னேற்றம் அடைவதில் சிரமம் உள்ளதாக தெரிவித்தனர். மேலும் ஏற்றுமதி வாய்ப்புகளை அதிகரிப்பதற்கான ஆலோசனைகளையும் வழங்கினர்.

அனைத்துத் தரப்பினரின் கருத்துக்களை கேட்டறிந்ததுடன், தமிழ்நாடு உணவு பதப்படுத்துதல் மற்றும் வேளாண்பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகத்தின் செயல்பாடுகளையும் வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள், விரிவாக ஆய்வு செய்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அறிவுரைகளை வழங்கினார்.

**விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்!**

இதில் விவசாயிகளுக்கு ஏற்றுமதித் தரத்தில் விளைபொருட்களை உற்பத்தி செய்வதற்கும், தகுந்த மதிப்புக் கூட்டல் மேற்கொண்டு உரிய சந்தையில் விற்பனை செய்திடவும், விளைபொருட்களுக்கு அதிக விலை பெறவும், தொடர்புடைய அனைத்துத் துறைகளும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்றும், குறிப்பாக தமிழ்நாடு உணவு பதப்படுத்துதல் மற்றும் வேளாண்பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகத்தின் (TNAPEx) செயல்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டு அனைத்து மாவட்டங்களிலும் ஏற்றுமதி வாய்ப்புகள் தொடர்பான கருத்தரங்குகள், கூட்டங்கள், கண்காட்சிகள் நடத்தப்பட்டு ஏற்றுமதி முன்னேற்றத்திற்கு வழிவகுக்க ஏதுவாக அடுத்த ஐந்து மாதங்களுக்கான கால அட்டவணை தயாரிக்க வேண்டும் என்றும் அதன்படி விவசாயிகள், ஏற்றுமதியாளர்கள் உள்ளிட்டோருக்கு ஏற்றுமதி தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வேளாண் விளைபொருட்களின் ஏற்றுமதியை அதிகரிக்க வேண்டும் என வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

மேலும், முருங்கைக்கு ஏற்றுமதிக் குறியீட்டு எண் (HSN Code) பெறவும் தமிழ்நாட்டிற்கென ஏற்றுமதிக்கான தனித்துவ ஹோலோகிராம் உருவாக்கவும், வேளாண் வணிகத் துறையின் குளிர்பதனக் கிடங்குகள், சேமிப்புக் கிடங்குகள் உள்ளிட்ட கட்டமைப்பு வசதிகளை ஒருங்கிணைத்துப் பயன்படுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

**விவசாயிகளுக்கு பயிற்சி!**

மேலும் தமிழ்நாடு உணவு பதப்படுத்துதல் மற்றும் வேளாண்பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகம் (TNAPEx) தொழில்முனைவோர்களுக்கும், விவசாயிகளுக்கும் பயிற்சி அளிப்பதோடு நின்றுவிடாமல் தொழில் முனைவோராக மாற்றிட வேண்டிய தொடர் நடவடிக்கை எடுக்க வேண்டும், மாவட்டந்தோறும் குறைந்தது 100 ஏற்றுமதியாளர்களைத் தேர்வு செய்து அவர்களுக்கு உரிய ஆலோசனைகள் வழங்கி ஊக்கப்படுத்த வேண்டும் என்றும், எஞ்சிய நச்சு பரிசோதனை ஆய்வகங்களை தூத்துக்குடி, திருச்சி, கோவை, சென்னை ஆகிய நகரங்களில் ஏற்படுத்த அறிவிப்பு செய்யப்பட்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் மூலம் தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும், விவசாயிகளை அதிக அளவில் உணவு பதப்படுத்துவோர் மற்றும் ஏற்றுமதியாளர்களுடன் இணைப்பதையும், விவசாயிகளைத் தொழில் முனைவோர்களாக மாற்றி, புதிய ஏற்றுமதியாளர்களை உருவாக்குதல் மற்றும் அதிக அளவில் வேளாண் விளைபொருட்களை ஏற்றுமதி செய்தல் ஆகிய நோக்கங்களுடன் அனைவரும் செயல்பட வேண்டும் என்றும் வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் வலியுறுத்தினார்.

இக்கலந்தாய்வுக் கூட்டத்தில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர், வ.தட்சிணாமூர்த்தி, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை ஆணையர் த.ஆபிரகாம், வேளாண்மைத்துறை இயக்குநர், பா.முருகேஷ், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர், பெ.குமாரவேல் பாண்டியன், தமிழ்நாடு உணவு பதப்படுத்துதல் மற்றும் வேளாண்பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர், கோ. அழகுசுந்தரம், அப்பீடா மண்டல தலைவர், திருமதி.ஷோபனா குமார், வேளாண்மை -உழவர் நலத்துறையின் உயர் அலுவலர்கள் மற்றும் வேளாண் விளைபொருட்கள் ஏற்றுமதியாளர்கள் (காணொலியில்) கலந்து கொண்டனர்.

புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார் கோவில் வட்டம், நாகுடி அருகே உள்ள காரணியேந்தல் கிராமத்தினைச் சேர்ந்த திருமதி.பர்வீன்பானு (வயது 40) க/பெ ஜலாலுத்தீன் (லேட்) அவர்கள், கடந்த 14.07.2025 அன்று மாலை கருங்குழிக்காடு கண்மாய் பகுதியில் மேய்ச்சலுக்கு விடப்பட்டிருந்த மாடுகளை பிடித்து வரச் சென்றபோது மறைவெய்தினார். இந்த தகவலை முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று முதலமைச்சர் அவர்களின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.3 லட்சம் நிதியுதவித் தொகைக்கான காசோலையை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் 20.08.2025 அன்று அவரது குடும்பத்தினரிடம் வழங்கி ஆறுதல் கூறினார். உடன் அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் ச.சிவக்குமார், அறந்தாங்கி நகர்மன்றத் தலைவர் ஆனந்த் மற்றும் பலர் உள்ளனர்.





ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த கல்லூரி மாணவர் ஜெயசூர்யாவுக்கு சிவில் என்ஜினீயரிங் பட்டப்படிப்பு கல்வி உதவித் தொகையாக, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் தனது சொந்த நிதியிலிருந்து ரூ.10,000 வழங்கி, மாணவர் வெற்றிகள் பெற வாழ்த்துகளை தெரிவித்தார்.